*வினா எண். 8 — திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரியலூரில் சார்பு நீதிமன்றங்கள் அமைப்பதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணம் யாது?

(ஆ) எப்போது அமைக்கப்பெறும்?

THE HON. THIRU K. NARAYANASWAMY: (a) and (b) – The proposals for constitution of a Sub-Court at Ariyalur and a District Munsif's Court at Jayamkondan, based on the recommendations of the Committee on Jurisdiction of Courts, will be taken up for sanction in the order of priority as soon as the required funds are allocated.

திரு. வெ. கருணாமூர்த்தி: தலைவர் அவர்களே, அரியலூரில் ஒரு சப்கோர்ட்டும், ஜெயங்கொண்ட சோழபுரத்தில் முன்சிப் கோர்ட்டும் வேண்டுமென்ற கோரிக்கை பல ஆண்டுக் காலமாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த பிரையாரிட்டியில் எந்த இடத்தை அரியலூர் பெற்றிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Thiru K. NARAYANASWAMY: So far as the Ariyalur sub-Court is concerned, the recomendation of the High Court isthat it takes the 5th place. Four Sub-Courts have already been sanctioned. The next Sub-Court, I may give this news, will be the next item in the priority list, and therefore, there is every likelihood of the Ariyalur Sub-Court being sanctioned, subject to financial constraints at as early a time as possible.

திரு. த ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாணபுமிகு அமைச்சர் அவர்கள் அரியலூரில் சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு 'சாங்ஷன்' ஆகியிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். அது எவ்வளவு விரைவில் திறக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

The Hon. THIRU K. NARAYANASWAMY: As early as possible.

நீலகிரி மாவட்டத்திலுள்ள புராதன கல்வெட்டுக்கள்.

*வினா எண் 9 — திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீலகிரி மாவட்டத்தில் பல இடங்களில் பல புராதன கல்வெட்டுக்கள் இருப்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?